# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:***ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| **19 ஜனவரி 2020** | **பொதுக்காலம் 2 ஆம் ஞாயிறு** | **முதல் ஆண்டு** |
|---|---|---|



# உங்கள் சிந்தனைக்கு...

இன்று பொதுக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு. இறைமகன் இயேசுகிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்திட வந்துள்ள இறைமக்களே! இன்றைய திருப்பலிக் கொண்டாடத்தில் பங்கேற்க உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

“கடவுளின் ஆட்டுடிக்குட்டி“ என்று கூறும் திருமுழுக்கு யோவான் இயேசுக் கிறிஸ்துவிற்குச் சான்றுப் பகிர்வதன் மூலம் மெசியாவை இஸ்ரயேல் மக்களுக்கு அடையாளம் காட்டுகிறார். தூயஆவி புறாவடிவில் இறங்கி வந்து யார் மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார் என்று அடையாளம் காட்டப்பட்டவரை “நானும் கண்டேன்“ என்று பதிவு செய்கிறார்.

இறைவனின் ஆட்டுக்குட்டி உலகின் பாவங்களைப் போக்க வந்தவர் என்று இயேசு வர்ணிக்கப்பட்டதை நாள்தோறும் திருப்பலியில் திருவிருந்திற்கு முன் நினைவூட்டப்படுகிறது. பாவங்களை மன்னிப்பதை மட்டுமல்ல. புண்ணியங்களாக மாற்றுவதே இயேசுவின் பணி. மனிதகுலம் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்தது. இந்நிலையில் இயேசு செம்மறியாக நமக்காகத் தன்னையே கையளித்தார். இதன் மூலம் பாவத்திலிருந்து விடுதலையடைந்து புனித வாழ்வு வாழவும் அழைப்பு விடுக்கின்றார். இயேசுவின் அழைப்புக்குச் செவிமடுத்து அவரது சீடர்களாக வாழ உறுதி எடுப்போம். அதற்குத் தேவையான வரங்களை வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

## GIFT திட்டத்திற்காக இரண்டாம் காணிக்கை

இவ்வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை, நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். இக்காணிக்கையானது, நம் உயர்மறைமாவட்டத்தில் செயற்படும் பல்வேறு அமைப்புக்களுக்காகவும், கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். உங்கள் தாரள காணிக்கைக்கு மிக்க நன்றி!




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

### இன்று மதியம் 2:30 மணி

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## நன்றியின் விழா - பொங்கல் விழா கொண்டாட வாரீர்!



அப்போஸ்தலர்கள் இயேசுவோடு இணைந்து ஒப்புக் கொடுத்தது போல, 24 பொங்கல் பானைகளை அடையாளமாக்கி **இன்று மாலை 4:30 மணிக்கு** நமது ஆலயத்தில் நன்றிப் பலியாக ஒப்புக் கொடுப்போம். தொடர்ந்து மாலை 6:30 மணிக்குத் திருப்பலி நடைபெறும்.




**வாழ்வின் விளைவின் காணிக்கையை கடவுளுக்கு நன்றிப் பலியாக்க வாரீர்!**

## தூய லூர்து அன்னை ஆலயத் திருவிழா 2020

நம்முடைய பங்கின் பாதுகாவலியாம் தூய லூர்து அன்னையின் ஆண்டுத் திருவிழா 30-01-2020 (வியாழன்) முதல் 07-02-2020 (வெள்ளி) வரை நவநாட்களும், **08-02-2020 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவிழா திருப்பலியும் நடைபெறும்.** அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய தேர்ப்பவனியும் நடைபெறும். திருவிழா திருப்பலி நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு. வில்லியம் கோ அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.



05-02-2020 (புதன்), 06-02-2020 (வியாழன்), 07-02-2020 (வெள்ளி) ஆகிய நாட்களில் மாலை 8:00 மணிக்குத் **தமிழில் நவநாள் திருப்பலி நடைபெறும்.** அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

**குறிப்பு:** நம் பங்கின் ஆண்டுத் திருவிழாவை சிறப்பிக்க நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடை அளிக்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

### 27-01-2020 திங்கள் - சீனப் புத்தாண்டு விடுமுறை

காலை 9 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி,
காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி



மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும். அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை.

பங்குத்தந்தை அருட்திரு மைக்கல் சீத்தாராம் மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்கள் சார்பாக அனைவருக்கும் சீனப் புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். **Gong Xi Fa Cai!**

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 49:3,5-6 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 40: 1,3ab, 6-7a, 7b-8, 9 |
| **பதிலுரை:** ஆண்டவரே உம் அடியான்; உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன். | |
| **இரண்டாம் வாசகம்:** | 1கொரிந்தியர் 1:1-3 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 1:29-34 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

